51. சில பகுதிகளை ஆட்சி வரம்பாகக் கொண்ட தீர்ப்பாயங்களை அமைப்பது குறித்து, வணிக வரிகள்-சமய அறக்கட்டளைகள் துறையின் 29.4.1980-ஆம் தேதியிடப்பெற்ற 30903/VIII-2/79-15-ஆம் எண் கடிதத்தில் வெளியான அறிவிப்பு. (தமிழ்நாடு, 1963 ஆம் ஆண்டு இனாம் எஸ்டேட்டுகள் (ஒழிப்பு-ரயத்துவாரியாக மாற்றுதல்) சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 26/1963) 73 (5) பிரிவின் கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.

52. வீட்டு வசதித் துறையில் 3.10.1972-ஆம் தேதியன்று வெளியான 27.19.1972-ஆம் தேதியிடப்பெற்ற தமிழ்நாடு அரசிதழின் பாகம்-II, பக்கங்கள் 1-68 ல் (ஆங்கிலத்தில்) வெளியான எஸ். ஆர். ஓ. எண். ஏ. 100/72 ஆம் எண் அறிவிப்பில் கண்ட தமிழ்நாடு 1972-ஆம் ஆண்டு குடிசைமாற்று வாரியக் கடைநிலைப் பணி விதிகளில் சில திருத்தங்கள் செய்வது குறித்து வீட்டு வசதி-நகர்ப்பகுதி மேம்பாட்டுத் துறையின் 26.11.1979-ஆம் தேதியிடப் பெற்ற 2123-ஆம் எண் அரசாணையில் வெளியான அறிவிப்பு. (தமிழ்நாடு 1971-ஆம் ஆண்டு, குடிசைப் பகுதிகள் (மேம்படுத்துதல்-அகற்றுதல்) சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 11/1971) 72 (2) பிரிவின் கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது).

ஆ. அறிக்கைகள், அறிவிப்புகள், ஏனைய தாள்கள்.

*85. கோரிக்கை எண். 39-சாலைகளும்-பாலங்களும் மற்றும் கோரிக்கை எண். 52-சாலைகளும் பாலங்களுக்கான மூலதனச் செலவு-தமிழ்நாட்டில் சாலை மேம்பாட்டுத்திட்டம், 1979-80-ஆம் ஆண்டுக்கான திட்டங்களும் (தமிழ், ஆங்கிலம்)

*86. கோரிக்கை எண். 34-க்கான தமிழ்நாட்டில் நகர்ப்புற வளர்ச்சி பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு, 1980-81 (தமிழ், ஆங்கிலம்),

---

* 19-7-1980 அன்று உறுப்பினர்களுக்கு அனுப்பப் பெற்றன.